# மேட்டுப்பாளையம் நகராட்சி
# 2019 – 2020 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை
# நகர் மன்றத் தீர்மான எண். 100 நாள்.30.04.2020

## 1 . அமைப்பும் நிர்வாகமும் :

மேட்டுப்பாளையம் நகரம் நீலகிரிமலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. மேட்டுப்பாளையம் 1948ம் ஆண்டு முதல் மூன்றாம் நிலைய நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு அரசு ஆணை எண்.337 ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள். 08.03.78ன்படி 01.04.78 ஆம் ஆண்டு முதல்நிலை நகராட்சியாக இயங்கி வந்தது. அரசாணை எண்.85 உள்ளாட்சித் துறைப்படி 22.05.98ம் முதல் இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்வு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் மொத்த பரப்பளவு 7.2 சதுர கிலோ மீட்டர், இவ்வாண்டில் பரப்பளவில் மாறுதல் ஏதுமில்லை.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரத்தின் மக்கள் தொகை 69.213. இதில் ஆண்கள் 34232 பேர்களும், பெண்கள் 34981 பேர்களும் உள்ளனர்.

அ) தமிழ்நாடு அரசு ஆணை எண்.135 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) நாள்:11/6/96ன்படி இந்நகராட்சியின் 1991ம் வருடத்திய மக்கள் தொகை 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசாணை எண்.61. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) நாள்: 20.05.2019ன்படி வார்டு எண்கள் முறையே மொத்தம் 33 வார்டுகளில் வார்டு எண். 12,24 இரண்டு வார்டுகள் SC(G) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான பொது வார்டாகவும், வார்டு எண்கள் 13,25,33 SC(W) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான பெண்களுக்கான வார்டாகவும், பொது பெண்களுக்கான வார்டாக 1,3,4,6,8,14,16,20,23,26,28,29,31,32 ஆக 14 வார்டுகளாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

### நிர்வாகம் :

திரு.மு.காந்திராஜ் பி.காம். எம்.பி.ஏ அவர்கள் 01.04.2019 முதல் 11.11.2019 வரையிலும் 12.11.2019 முதல் 17.11.2019 வரை திரு. மா.கணேசன் எம்.இ., அவர்கள் பொறுப்பு வகித்துள்ளார். 18.11.2019 முதல் 31.03.2020 வரை திரு.சு.சு.சுரேஷ்குமார் அவர்கள் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

### நகராட்சி பொறுப்பு :

திரு.மா.கணேசன் அவர்கள் நகராட்சி பொறியாளர் 01.04.2019 முதல் 29.03.2020 வரையிலும், திருமதி. சி.கவிதா உதவிப்பொறியாளர் 30.03.2020 முதல் 31.03.2020 வரை நகராட்சி பொறியாளர் கூடுதல் பொறுப்பு கவனித்து பணிபுரிந்து வருகிறார்.

### மேலாளர் :

திரு.ஜே.பிரான்சிஸ் சேவியர் அவர்கள் 01.04.2019 முதல் 22.06.2019 வரையிலும் திரு. எம். முத்துக்குமார் அவர்கள் 06.07.2019 முதல் 09.01.2020 வரையிலும் திரு.அ.வைரவேல் கணக்கர் அவர்கள் 10.01.2020 முதல் 18.03.2020 வரையிலும் மேலாளராக பொறுப்பு வகித்துள்ளார் திரு.வே.சண்முகம் அவர்கள் 19.03.2020 முதல் 31.03.2020 வரையிலும் நகராட்சி மேலாளராக பணிபுரிந்து வருகிறார்.

### கணக்கர் :

திரு. ஜாகீர் 01.04.2018 முதல் 01.03.2019 வரையிலும் திரு.அ.வைரவேல் அவர்கள் 11.03.2019 முதல் 20.03.2020 வரையிலும் கணக்கராகவும் பணிபுரிந்து வந்துள்ளனர்.

### நகரமைப்பு ஆய்வர் :

திரு. வீரமணி 01.04.2019 முதல் 25.11.2019ல் வரையிலும் பணிபுரிந்து பணியிடையே 25.11.2019 அன்று காலமாகிவிட்டார். பிறகு அப்பணியிடம் தொடர்ந்து காலியாக உள்ளது. திருமதி. எம்.மீனாட்சி ஆய்வர் 26.11.2019 முதல் 31.03.2020 வரையிலும் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். நகரமைப்பு அலுவலர் பணியிடம் 01.11.2017 முதல் காலியாக உள்ளது.

**உதவிப்பொறியாளர் :**

திரு.01.04.2019 முதல் 26.02.2019 வரையிலும் திரு. ராஜ்குமார் அவர்கள் உதவிப்பொறியாளராகவும், திருமதி. சி.கவிதா அவர்கள் 27.02.2019 முதல்.நாளது தேதி வரையிலும், திருமதி. எஸ்.அனிதா 01.04.2019 முதல் 31.03.2020 வரையிலும் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். திரு. அன்வர் மின்கண்காணிப்பாளராக 01.04.2019 முதல் 31.03.2020 வரையும் பணிபுரிந்து வருகிறார்.

## தேர்தல்கள் :

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு நகர்மன்றக் கூட்டங்கள் நடைபெற்றன.

| கூட்டம் | கூட்டங்களின் எண்ணிக்கை | மொத்தப் பொருட்கள் |
|---|---|---|
| சாதாரணக் கூட்டம் | 12 | 283 |
| அவசரக்கூட்டம் | 5 | 12 |
| சிறப்புக்கூட்டம் | 0 | 0 |
| மொத்தம் | 17 | 295 |

மொத்தம் 17 கூட்டங்களில் 295 பொருள்கள் முன்வைக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.

## 3. ஒப்பந்தக்குழுக்கூட்டம் :

நடப்பு ஆண்டில் ஒப்பந்தக்குழு கூட்டம் எதுவும் நடைபெறவில்லை

## 4. உள்ளூர்த்திட்டக்குழுக்கூட்டம் :

நடப்பு ஆண்டில் 5 உள்ளூர்த்திட்டக்குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு 103 பொருள்கள் முன்வைக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.

## 5. குழுக்கள் :

அறிக்கையாண்டில் ஆணையாளரைத் தனி அலுவலரை கொண்டு நகர்மன்றம் செயல்பட்டு வந்தது, குழுக்கள் ஏதும் தேர்ந்தெடுக்கப்படவில்லை,

## 6. மேலாளுகை :

| | | | |
|---|---|---|---|
| 1 | மேலாளர் ,[Class. II.] | 1 | – |
| 2 | கணக்கர் ,[Class. IV.] | 1 | – |
| 3 | உதவியாளர்கள் ,[Class. V.] | 2 | – |
| 4 | இளநிலை உதவியாளர்கள் ,[Class. VII.] | 12 | (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| 5 | கணிணி உதவி அமைப்பாளர் | 1 | – |
| 6 | தட்டச்சர் | 1 | ( பணியிடம் காலியாக உள்ளது) |
| 7 | புள்ளி விவரக் குறிப்பாளர் | 1 | – |
| 8 | பதிவறை எழுத்தர் | 1 | – |
| 9 | அலுவலக உதவியாளர் | 1 | – |
| 10 | இரவு காவலர் | 1 | ( பணியிடம் காலியாக உள்ளது) |
| 11 | சத்துணவுத்திட்டத்தின் கீழ் உதவியாளர் | 1 | – |

பொது அலுவலகப்பிரிவில் பணியாளர்களுக்கு அறிக்கையாண்டில் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 132036072.– ஆகும். சென்ற ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 10365009.– ஆகும்.

**வருவாய்த்துறை பிரிவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் விபரம் பின்வருமாறு :**

| வ. எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் | காலிப்பணியிடம் |
|---|---|---|---|
| 1 | வருவாய் ஆய்வாளர் பணியிடம் (உதவியாளர் நிலை) | 2 | 1 (பணியிடம் காலியாக உள்ளது) |
| 2 | வருவாய் உதவியாளர் மொத்தம் 10 பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. | 10 | 1 வருவாய் உதவியாளர் பணியிடம் காலிப்பணியிடம் |
| 3 | சந்தைக் காவலர் | 1 | – |
| 4 | பேருந்து நிலைய காவலர் | 1 | (பணியிடம் காலியாக உள்ளது) |
| 5 | சிறப்பு வருவாய் ஆய்வர் | – | வருவாய் உதவியாளர் பணியில் 20 ஆண்டுகள் சிறப்பாக பணிப்புரிந்த இரண்டு வருவாய் உதவியாளர்கள் சிறப்பு வருவாய் ஆய்வர் அந்தஸ்தில் பணிப்புரிந்து வருகிறார்கள். |

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 25.05.1998 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 85ம் எண் கொண்ட அரசு ஆணைப்படி வருடாந்திர சகாயத்தொகையாக 2019–2020 ஆண்டுக்கு ரூ.90,000/– அறிக்கையாண்டில் செலுத்தப்பட்டது.

## 7. வழக்குகள் :

அறிக்கை ஆண்டில் 10 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

நகராட்சி வழக்கறிஞராக திரு. வி. செந்தில்குமார், எம்.காம்., எல்.எல்.பி., அவர்கள் 25.09.2012 முதல் நடப்பு ஆண்டு வரை நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்.

## 8. சத்துணவுத் திட்டம் :

குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலரின் கீழ் அரசாணை எண்.17 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள் : 30.01.2004ன்படி 2 வயது முதல் 4 வயதுள்ள குழந்தைகளுக்கான திட்ட மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் 5 வயது முதல் 9 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 15 துவக்கப்பள்ளிகளில் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையப்பணி பொறுப்புகளை கவனிக்க பள்ளி சத்துணவு அமைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு இவர்களுக்கு அரசால் அனுமதிக்கப்பட்டவாறு கருவூலம் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. 2019–2020ல் உணவூட்டுச் சில்லரைச் செலவினமாக ரூ. 7,50,000ம் செலவிடப்பட்டுள்ளது.

10 முதல் 14 வயது வரையில் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும் மதிய உணவாக சத்துணவு வழங்கப்படுகிறது. இந்நகராட்சிப் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் இரண்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி
2. மகாஜன மேல்நிலைப்பள்ளி

அறிக்கை ஆண்டில் 10 ப்ளஸ் 14 வயது பிரிவில் பணிபுரியும் சத்துணவுப்பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் மதிப்பூதியம் கருவூலம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது உணவூட்டுச் செலவு ரூ.4,50,000/–ம் செலவிடப்பட்டுள்ளது. 1.11.2001 முதல் கொண்டைக்கடலை (அல்லது) பாசிப்பயிறு, செவ்வாய்க்கிழமை தோறும் (0.20 கிராம் அளவு) வழங்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை உருளைக்கிழங்கு (0.20 கிராம் அளவு) வழங்கப்படுகிறது.

பள்ளி சத்துணவு மையங்களில் மாணவ மாணவிகளுக்கு கீழ்க்காணும் விகிதப்படி உணவு வழங்கப்படுகிறது.

துவக்கப்பள்ளி முதல் நடுநிலைப்பள்ளிவரையிலான மாணவர்களுக்கு அரிசி 0.100 கிராம் அளவிலும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரிசி 0.150 கிராம் அளவிலும், பருப்பு 0.15 கிராம், எண்ணெய் 0.3 கிராம், காய்கறிகள் 0.50 கிராம் வீதம் வழங்கப்படுகிறது. காய்கறி மற்றும் விறகுக்காக 1 முதல் 5 வயதுள்ள மாணவர்களுக்கு 70 பைசா மற்றும் 6 முதல் 10 வயதுள்ளவர்களுக்கு 80 பைசாவும் செலவிடப்படுகிறது.

அறிக்கை ஆண்டில் 5 ப்ளஸ் 9 பிரிவினருக்கு ரூ. 7,50,000/– மானியமும் 10 ப்ளஸ் 14 வயது பிரிவுகளுக்கு ரூ. 4,50,000/– மானியமாக பெறப்பட்டுள்ளது. 15.07.2007 ஆம் தேதி முதல் வாரந்தோறும் மாணவ மாணவியருக்கு அனைத்து வேலை நாட்களில் தலா 1 முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

## பொறியியல் பிரிவு :

| பணியிட விபரம் | மொத்த பணியிடம் | காலிப்பணியிடம் |
|---|---|---|
| பொறியர் 3வது கிரேடு உதவிப்பொறியர்கள் | 1 | பணியிடம் காலி |
| படவரைவாளர் | 1 | – |
| பணி ஆய்வர் | 0 | பணியிடம் காலி |
| அலுவலக உதவியாளர் | 1 | – |
| மின்கம்பியாளர் | 2 | (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| மின்கம்பி உதவியாளர் | 2 | (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| ஓட்டுநர் | 2 | – |

நகராட்சிப்பொறியாளரும், உதவிப்பொறியாளரும், பணி ஆய்வரும் கட்டிங்கள், சாலைப் பொது வேலைகள், மின்கண்காணிப்பாளர், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு ஆகியவைகளை கவனித்து வருகின்றனர்.

பொதுச்சுகாதாரம் மற்றும் நகரமைப்பு தலைப்புகளின் கீழ் வராத இதர வேலைகள் நீர் வழங்குதல், சாக்கடைத் திடடமும் மற்றும் பொதுப்பணி கட்டிடங்கள், சாலைகள் ஆகிய முக்கிய வேலைகளை பொறியாளர் மேற்பார்வை செய்து வருகிறார்.

### (அ) சாலைகள் :

நகராட்சி எல்லைக்குள் பெரிய சாலைகள் ஏதுமில்லை. நடப்பு ஆண்டில் கீழ்க்கண்டுள்ள சாலைகள் பெருவழித்துறையினர் நிர்வாகத்தில் உள்ளன.

| | | |
|---|---|---|
| கோயமுத்தூர் | : | உதக மண்டல சாலை |
| மேட்டுப்பாளையம் | : | திருப்பூர் சாலை |
| மேட்டுப்பாளையம் | : | பவானிசாகர் சாலை |
| மேட்டுப்பாளையம் | : | கோத்தகிரி சாலை |

**நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் பற்றிய விபரம் :**

| | | |
|---|---|---|
| 1 | சிமெண்ட் கான்கிரீட் | 20.884 கி.மீ |
| 2 | தார் சாலை | 58.814 கி.மீ |
| 3 | கப்பி சாலை | - |
| 4 | மண்சாலை | 3.498 கி.மீ |
| | மொத்தம் | 83.196 கி.மீ |

### (ஆ) பாலங்கள் :

2019 – 2020 ஆம் ஆண்டில் பாலங்கள் ஏதும் கட்டப்படவில்லை

**(இ) பரிசல் துறைகள் :**

இந்நகராட்சியில் பரிசல் துறைகள் ஏதும் இல்லை.

**10.** பயணிகள் தங்குவதற்காக சத்திரங்களை எதுவும் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை

**11.** இந்நகராட்சியில் ஒரு ஹீட் மானிட்டரும், 3 பவர் மிக்சர்களும் ஒரு ரோடு ரோலரும் பழுதடைந்துள்ளது. வாடகைக்கு விடப்படவில்லை. ஒரு கழிவுநீர் வாகனமும். ஒரு டிராக்டரும், ஒரு லாரியும் பழுதடைந்து பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

## 12. விளக்குகள் :

தெரு விளக்குகள் பராமரிப்பு நகராட்சி மின்கண்காணிப்பாளர் மூலம் பராமரிக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் கீழ்க்கண்டுள்ளவாறு LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட தெரு மின்விளக்குகளை தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

| வ. எண். | விபரம் | 2015 – 2016 | 2016 – 2017 | 2017 – 2018 | 2018 – 2019 | 2019 – 2020 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | – | – | – | – | – |
| 2 | LED 15W | 1980 | 2043 | 2043 | 2043 | 2043 |
| 3 | 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் | 427 | 427 | 427 | 427 | 427 |
| 4 | 250 வாட்ஸ் மெர்குரி விளக்குகள் | – | – | – | – | – |
| 5 | உயர் கோபுர விளக்கு | 2 | 2 | 2 | 3 | 3 |
| 6 | T5 மெர்க்குரி விளக்குகள் | 132 | 132 | 132 | 132 | 132 |
| | மொத்தம் | 2541 | 2604 | 2604 | 2605 | 2605 |

தெருவிளக்குகளுக்கு மின்கட்டணமாக ரூ.52,62,966 அறிக்கையாண்டில் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டது. மேலும் தெருவிளக்குகளை ஸ்நெல் எனர்ஜி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 13. குடிநீர்த்திட்டம் :

இந்நகராட்சியில் பழைய குடிநீர்த்திட்டம் 1948 துவக்கப்பட்டது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் குடிநீர் பவானி ஆற்றிலிருந்து எடுக்கப்படுகிறது. காரமடை பேரூராட்சி மற்றும் மத்திய அரசு அச்சகம், வீரபாண்டி ஆகிய இருபகுதிகளை உள்ளடக்கி 1968ம் ஆண்டு முதல் கூட்டுக்குடிநீர்த்திட்டம் செயல்பட்டு வருகிறது.

கூட்டுக்குடிநீர்த்திட்டம் பங்களாமேடு தரைமட்ட நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் உந்து நிலையம் 1லிருந்து காரமடை பேரூராட்சிக்கும் மத்திய அரசு அச்சகத்திற்கும் பங்களாமேடு நீர் உந்து நிலையம் மற்றும் காரமடையில் அமைந்துள்ள நீர் உந்து நிலையம் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது நாள் ஒன்றுக்கு 85.60 இலட்சம் லிட்டர் சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர் நகருக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் விநியோகம் செய்யப்படுகிறது.

அதில் காரமடைப் பேரூராட்சிக்கு 2.00 இலட்சம் லிட்டரும், மத்திய அரசு அச்சகம், வீரபாண்டிக்கு 2.5 இலட்சம் லிட்டரும் தினசரி குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது நகராட்சியில் அனைத்துப்பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## குடிநீர் விநியோகம் :

| | | | |
|---|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | 1 | |
| 2 | பவுண்டன் சுத்திகரிப்பாளர் | 1 | |
| 3 | காவலாளி | 3 | 1 பணியிடம் காலி |
| 4 | ஓட்டுநர் | 0 | 1 பணியிடம் காலி |
| 5 | மின்கண்காணிப்பாளர் | 1 | |
| 6 | மின்கண்காணிப்பாளர் நிலை –I 3 பணியிடம் | 2 | 1 பணியிடம் காலி |
| 7 | மின்கண்காணிப்பாளர் நிலை –II 4 பணியிடம் | 0 | 2 பணியிடம் காலி |
| 8 | வடிதொட்டில இயக்குபவர் | 0 | காலிப் பணியிடம் |
| 9 | சுத்திகரிப்பாளர் | 2 | 1 பணியிடம் காலி |
| 10 | குழாய் ஆய்வாளர் | 2 | |
| 11 | தலைமை நீரேற்று நிலைய உதவியாளர் | 1 | |
| 12 | குழாய் திறப்பாளர் | 1 | 2 பணியிடம் காலி |
| 13 | குழாய் பொருத்துனர் நிலை II | 3 | |

31.03.2020 முடிய உள்ள வீட்டுக் குழாய் இணைப்புகள் மொத்தம் னுஊகூ இவற்றில் 10980 மீட்டர் பொருத்தப்பட்டவை. மீட்டர் இல்லாதவை 379.

| வ. எண். | விபரம் | 2015 – 2016 | 2016 – 2017 | 2017 – 2018 | 2018 – 2019 | 2019 – 2020 |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீட்டு இணைப்பு மீட்டர் இல்லாதவை | 379 | 379 | 379 | 11706 | 379 |
| 2 | மீட்டர் உள்ளவை | 10586 | 10980 | 10980 | 379 | 12061 |
| | | 10965 | 11359 | 11359 | 12391 | 12440 |

ஒற்றைக்குழாய் : 212

இரட்டைக்குழாய் : 39

மொத்தம் : 251

அறிக்கையாண்டில் விநியோகிக்கப்பட்ட குடிநீர் 8.74 எம்.எல்.டி. இந்நகராட்சியின் விநியோக விகிதப்படி மீட்டர் பொருத்தப்பட்ட ஒவ்வொரு வீட்டிணைப்புகளுக்கும் நாள் ஒன்றுக்கு 300 லிட்டர் வீதம் குடிநீர் இலவசமாக விநியோகம் செய்யப்படுகிறது. வீட்டு உபயோக முறையில் கூடுதல் 1000 லிட்டருக்கு ரூ. 6.50 வீதம், வீட்டு உபயோகம் அல்லாத முறையில் 1000 லிட்டருக்கு ரூ. 10.50 வீதம், வர்த்தக முறையில் 1000 லிட்டருக்கு ரூ.12.50 வீதம் வசூல் செய்யப்படுகிறது. உபரி தண்ணீர்க்கட்டணம் வசூல் மூலம் 24,00,000/– லட்சம் வசூலிக்கப்பட்டது. குடிநீருக்கான கிணறுகள் இந்த நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை. நகரில் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்க ஆழ்குழாய் கிணறுகள் போடப்பட்டுள்ளன.

## 14. வடிகால் :

இந்நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

## 15. பொது நலமும் பாதுகாப்பும் :

விபத்திலிருந்து பாதுகாக்க இந்நகரில் 1975 – 76ம் ஆண்டில் தீயணைப்புப்படை ஏற்படுத்தப்பட்டது. தீயணைப்புப்படை உள்ளதால் தீவிபத்துகள் தவிர்க்கப்படுகின்றன. தற்பொழுது தீயணைப்பு நிலையம் சிக்கதாசம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட அன்னூர் ரோடு பகுதியில் செயல்பட்டு வருகிறது.

## 16. போக்குவரத்து :

நகராட்சி மூலம் போக்குவரத்து பராமரிக்கப்படுவதில்லை. இந்நகரில் மற்ற இடங்களுக்கு செல்ல அநேக தனியார் பேருந்துகள் இருப்பதாலும் மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழக பேருந்துகள் அதிகமாக ஓடுவதாலும் பொதுமக்களுக்கு பிரயாண வசதிக்கு யாதொரு இடர்பாடும் இல்லை.

## 17. ஆசிரியர்கள் :

நகராட்சி பள்ளிகளின் ஆசிரியர்கள் 01.04.90 முதல் கல்வித்துறை இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர்.

## 18. இடவசதியும், உபகரணங்களும் :

இந்நகராட்சியில் உள்ள 12 ஆரம்பப் பள்ளிகளில் 11 பள்ளிகள் சொந்தக் கட்டிடத்திலும், வள்ளுவர் துவக்கப்பள்ளி காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டிடத்திலும் இயங்கி வருகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் போதுமான காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளது. நேதாஜி துவக்கப்பள்ளி நீங்கலாக மற்ற அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டு மைதானங்கள் உள்ளன. தளவாடங்கள் வாங்கிய வகையில் செலவு ஏதும் இல்லை.

## 19. உயர்தரக்கல்வி :

- நகராட்சி எல்லைக்குள் ஒரு தனியார் பெண்கள் கல்லூரி நடைபெற்று வருகிறது.
- இந்நகராட்சி எல்லைக்குள் மூன்று மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன.

1. நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது.
2. மகாஜன மேல்நிலைப்பள்ளி அரசின் உதவியுடன் தனியாரால் நடத்தப்பட்டு வரப்படுகிறது.
3. சான்ஜோஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தனியார் உதவியுடன் நடத்தப்பட்டு வரப்படுகிறது.
4. பகவான் மகாவீர் சங்கர்நகர் நகரவை நடுநிலைப்பள்ளி மற்றும் மணிநகர் நகரவை நடுநிலைப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் நகராட்சியின் மூலம் கீழ்க்கண்ட பள்ளிகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண். | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | அண்ணா நகர் நகரவைத் துவக்கப் பள்ளி |
| 2 | சத்தியமூர்த்திநகர் நகரவைத் துவக்கப்பள்ளி |
| 3 | காட்டூர் நகரவைத் துவக்கப்பள்ளி |
| 4 | வள்ளுவர் நகரவைத் துவக்கப்பள்ளி |
| 5 | நேருஜி நகரவைத் துவக்கப்பள்ளி |
| 6 | நேதாஜி நகரவைத் துவக்கப்பள்ளி |
| 7 | வ.உ.சி. நகரவைத் துவக்கப்பள்ளி |
| 8 | நடுர் நகரவைத் துவக்கப்பள்ளி |
| 9 | அன்னூர் ரோடு நகவைத் துவக்கப்பள்ளி |
| 10 | பகவான் மகாவீர் சங்கர் நகர் நகரவை உயர்நிலைப்பள்ளி |
| 11 | மணி நகர் நகரவை உயர்நிலைப்பள்ளி |
| 12 | நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி |

## 20. உயர்தரக்கல்வி :

தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் இரண்டு நூலகங்கள் இயங்குகின்றன.

## 21. பொது வானொலி கருவிகள் :

பொது வானொலிக் கருவிகள் ஏதும் இந்த ஆண்டில் பராமரிக்கப்படவில்லை. அதற்கு இந்த ஆண்டு செலவு ஒன்றும் செய்யப்படவில்லை.

## 22. பொதுச்சுகாதாரம் :

1).கிழே குறித்த மருந்தகங்கள் அறிக்கையாண்டில் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மருந்தகம் | 1 |
| 2 | இரயில்வே மருந்தகம் | 1 |
| 3 | இ.எஸ்.ஐ மருந்தகம் | 1 |
| 4 | நகராட்சி நகர்நல மையம் | 1 |
| 5 | நகராட்சி தாய்சேய் நல விடுதி | தற்போது இயங்கவில்லை |

இவை தவிர 13 தனியார் மருத்துவமனைகளும் உள்ளன.

## அமைப்பும் நிர்வாகமும் :

சுகாதாரப்பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட தற்போது இயக்கத்திலுள்ள பணியிடங்கள்

| | | |
|---|---|---|
| நகர்நல அலுவலர் | 1 | (காலியாக உள்ளது) |
| மகப்பேறு உதவியாளர் | 1 | (காலியாக உள்ளது) |
| ஆயாக்கள் | 2 | (2 பணியிடம் உள்ளது) |
| துப்புரவு ஆய்வர்கள் | 5 | (1 பணியிடம் உள்ளது) |
| துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 1 | (6 பணியிடம் உள்ளது) |
| களப்பணி உதவியாளர் | 1 | |
| துப்புரவு பணியாளர்கள்<br>மொத்தம் 210 | 99 | (111 பணியிடங்கள் காலியாக உள்ளன) |

இவ்வலுவலர்களுக்கு நகராட்சிக்குரிய சம்பள விகிதங்களில் சம்பளங்கள் வழங்கப்பட்டன. அறிக்கையாண்டில் அதற்கு முந்தைய ஆண்டிலும் கொடுக்கப்பட்ட சம்பளம் பின்வருமாறு **:**

| | |
|---|---|
| 2014 – 2015 | 3,82,08,984.00 |
| 2015 – 2016 | 3,79,08,708.00 |
| 2016 – 2017 | 3,94,91,764.00 |
| 2017 –2018 | 4,93,64,705.00 |
| 2018 – 2019 | 3,90,91,102.00 |
| 2019 – 2020 | 722.99 இலட்சம் |

**சுகாதாரமும், பொதுக்கழிப்பிடங்களும் :**

இந்நகராட்சியில் மொத்தம் **17,076** வீடுகள் மற்றும் **2451** வணிக நிறுவனம் உள்ளன. கழிப்பறைகளுடன் கூடிய வீடுகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டில் **15,318** மீதமுள்ள வீடுகளுக்கு **733** நபர்களுக்கு தனிநபர் கழிவறை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. நகரிலுள்ள **33** வார்டுகளிலும் பணியாளர் பற்றாக்குறை உள்ள இடங்களில் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திட தனியார் நிறுவனத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது. மேலும், அவரவர்கள் இல்லங்களில் உண்டாகும் குப்பைகளை நகராட்சி வண்டிகள் வரும் நேரங்களில் அக்குப்பைகளைச் சேகரிக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நகரில் அனைத்து வார்டுகளிலும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் இடத்தில் (MCC) உரம் தயாரிக்கப்படுகிறது.

சுகாதாரப் பிரிவில் பணியாளர்கள் விபரங்கள் **:**

| | |
|---|---|
| துப்புரவு ஆய்வாளர் | 4 |
| ஒட்டுநர் | 9 |
| துப்புரவு மேற்பார்வையாளர் | 1 |

**ஆ.அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் :**

இந்த இனத்தின் கீழ் எல்லா தொழில்களுக்கும் உரிமையாணைகள் வழங்கப்பட்டன. **967** உரிமையாணைகள் வழங்கப்பட்டு ரூ.7,42,020/– வசூல் செய்யப்பட்டுள்ளது. உரிமையாணைகள் குறிப்பிட்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டனவா என கவனித்து மேற்படி தொழில்கள் நடைபெறும் இடங்களை சுகாதார ஆய்வாளர்கள் அவ்வப்போது பார்வையிட்டனர். உபவிதிகள் அமுலில் உள்ளன.

## 23. அங்காடிகள் வண்டி நிலையம், உந்து வண்டி நிலையம், ஆடுவதைச் சாலை, மரம் நடுதல் முதலியன.

கடந்த மூன்றாண்டுகளில் மொத்த வருமானம் பின்வருமாறு **:**

| வ. எண். | விபரம் | 2015 – 2016 | 2016 – 2017 | 2017– 2018 | 2018 – 2019 | 2019 – 2020 |
|---|---|---|---|---|---|---|
| 1 | தினசரி அண்ணா காய்கறி மார்க்கெட் | 1105000 | 1160250 | 1218262 | 1412500 | 1483125 |
| 2 | பேருந்து வண்டி நிலையம் | 404055 | 1155315 | 445471 | 1215500 | 1276275 |
| 3 | மார்க்கெட்டிலுள்ள திறந்த வெளிக்கடை | – | – | – | – | – |
| 4 | ஆடுவதைச் சாலை | 200655 | 37500 | 151875 | 159468 | 176000 |

## சந்தைகள் :

இந்நகர்மன்றம் ஒருவாரச்சந்தைப் பேட்டையும், கிடங்குகள், மார்க்கெட் கடைகளையும் பராமரித்து வருகிறது. அண்ணா மார்க்கெட்டிலுள்ள 16 கடைகளும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

| வ. எண். | விபரம் | 2015 – 2016 | 2016 – 2017 | 2017– 2018 | 2018 – 2019 | 2019 – 2020 |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய அண்ணா வணிக வளாக கடைகள் | 1435732 | 1391058 | 4306200 | 4326200 | 3623916 |
| 2 | பாரதியார் நூற்றாண்டு விழா கடைகள் | 400824 | 41440 | 23820 | 23820 | 174600 |
| 3 | குமரன் திடல் கடைகள் | 78852 | 53436 | 550560 | 550560 | 167448 |
| 4 | 8 பங்க் ஷாப்புகள் | 107868 | 31296 | 318240 | 318240 | 243624 |
| 5 | வாரச்சந்தைக் குத்தகை | – | – | – | – | – |
| 6 | பேருந்து நிலையக்கடைகள் | 225804 | 89371 | 8619360 | 8619360 | 1579514 |
| 7 | அண்ணா நாளங்காடி கடைகள் | 192720 | 270015 | 2540388 | 2540388 | 1565073 |
| 8 | சங்கர் பூங்கா குடோன்கள் பாரதியார் நூற்றாண்டு விழா குடோன்கள் | 220416 | 22924 | – | – | – |

## பேருந்து நிலையம் :

குமரன் மைதானத்தில் அமைந்துள்ள ஜவஹர்லால்நேரு பேருந்து நிலையம் நகரமன்றத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து கட்டணம் வசூலிக்கப்படும் உரிமம் மூலம் வரவு ரூ. 1276275

1981ம் வருடம் பேருந்து நிலையம் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்டத்திக் கீழ் நவீனமயமாக்கப்பட்டு முதல் திட்டம் 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

இரண்டாவது திட்டம் அரசினர் அங்கீகாரம் பெற்ற 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. முதல்தளத்தில் 48 கடைகளும் இரண்டாம் கட்டப் பேருந்து நிலையத்தில் 8 கடைகளும் கட்டி முடிக்கப்பட்டு பொது ஏலம் மூலம் உரிமைதாரர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

பேருந்து நிலையத்தை கண்காணிக்க காவலர் ஒருவர் உண்டு. மார்க்கெட் மற்றும் பேருந்து நிலையப் பராமரிப்பிற்கு ஆண்டு செலவு ரூ. 277380/–

## 3.லாரி நிலையம் :

நகரமன்றம் ஒருலாரிநிலையத்தை பராமரித்து வருகிறது. இதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ. 304395/– வருமானம் பெறப்பட்டது.

நகராட்சியில் ஆடுவதைச் சாலை ஒன்று பராமரித்து வரப்படுகிறது. இதனை பொது ஏலம் விடுவதின் மூலம் அறிக்கையாண்டில் ரூ. 176000 வருமானம் பெறப்பட்டுள்ளது.

நகராட்சி 6 மாட்டு இறைச்சிக் கடைகளை பராமரித்து வருகிறது. இவைகளின் மூலம் ரூ. 65330/– வாடகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

## 4.தொழிற்சாலைகளும், கனரகத் தொழில்களும் :

நகராட்சிப் பகுதியில் யுனைடெட் பிளீச்சர்ஸ் லிமிடெட் கம்பெனியைத் தவிர வேறு தொழிற்சாலைகளோ அல்லது கனரகத் தொழிற்சாலைகளோ இல்லை. மற்ற எல்லா தொழில்சாலைகளுக்கும் உரிமையாணை அளிக்கப்பட்டுள்ளது. மொத்த உரிமையாணைகளும் அதற்கு வரப்பெற்ற தொகையும் வருமாறு :

## கொடுக்கப்பட்ட உரிமையாணைகள் மற்றும் வசூல் விபரம் :

| | உரிமையாணை எண்ணிக்கை | வசூலித்த தொகை விபரம் |
|---|---|---|
| அபாளகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமையாணைகள் | 771 | 504007/– |

## 24.நகரமைப்புப் பிரிவு :

நகரமைப்புச் சட்டம் நகரில் அமுலில் உள்ளது. நகரமைப்பு உள்ளூர்த்திட்டக்குழு செயல்பட்டு வருகிறது. நகரமைப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| நகரமைப்பு அலுவலர் 2ம் நிலை | 1 | ( பணியிடம் காலி) |
| நகரமைப்பு ஆய்வாளர்கள் | 1 | ( 1 பணியிடம் காலி) |
| சங்கிலியார்கள் | 2 | (1 பணியிடம் காலி) |

### நகரமைப்புத் திட்டங்கள் :

மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் விரிவு அபிவிருத்தி திட்டம் 1 முதல் 5 வரை திட்டம் தயார் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 1

நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 2

உள்ளூர்த் திட்டக்குழு 04.07.2005ம் தேதிய 48ம் எண் தீர்மானத்தில் மேற்படி திட்டத்திற்கு நகர்ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 21ன் கீழ் இறுதி ஒப்புதல் பெற சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

### விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 3

வரைபடம் எண்.3 நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 4

சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க எண். 15122/2004/ DP2 நாள். 23.02.2007 உத்திரவில் மேற்படி திட்டத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 25ன் கீழ் இணக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இறுதி ஒப்புதலுக்கு அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 5

விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 5க்கு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் ந.க.எண்.1017 / 2005 / DP1 நாள். 28.03.2013 உத்திரவின்படி இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 29ன் கீழ் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசிதழ் தினசரி நாளிதழ்களில் திட்டத்திற்கான அறிவிப்பினை பிரசுரம்

செய்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் இறுதி ஒப்புதல் வழங்கியதன்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 6,7,8 தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 19(1)ன் கீழ் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 6,7,8 ஆகியவற்றினை தயார் செய்ய உள்ளூர்த்திட்டக்குழு 28.11.2012ம் தேதிய 123 எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது. அதனை தொடர்ந்து விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8க்கு வரைபடம் எண்.2 தயார் செய்து நில உரிமையாளர்களிடமிருந்து ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெற 12.09.2013ல் கூட்டம் நடத்தி எவ்வித ஆட்சேபணைகளும் பெறப்படவில்லை. அதனை தொடர்ந்து பிரிவு 25ன் கீழ் இணக்கம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரிவு அபிவிருத்தி திட்டம் 6,7 வரைவு நிலையில் உள்ளது.

### நகரமைப்புப் பிரிவு :

01.04.2019 முதல் 31.03.2020 வரை நிரந்தர ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை.

## 25.இதர வருவாய் முயற்சிகள் :

இந்நகராட்சியில் குறைந்த வருவாய் குடியிருப்பின் கீழ் 18 வீடுகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. நகராட்சி ஆணையருக்காக ஒரு குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. வீடுகளுக்கு மாதாந்திர வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நகராட்சிக்கு ஆண்டு வருமானம் ரூ.129600/– கிடைக்கிறது.

## 26.பொது இனங்கள் :

நகரில் பொதுச்சுகாதாரத்தை மேலும் சிறந்த முறையில் வைப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் விநியோகம் நன்கு செயல்படுகிறது. மேலும், நகரில் பொதுச்சுகாதாரம் சம்பந்தமாகன அம்சங்களான திடக்கழிவு மேலாண்மை, பொதுக்கழிப்பிடங்கள், கழிவுநீர் கால்வாய்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 01.04.2019 முதல் 31.03.2020 வரை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரம் :

| வ.எண். | திட்டத்தின் பெயர் | | மொத்த செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பகுதி II. திட்டம் | 1 | – |
| 2 | உட்கட்டமைப்பு நிதி நிரப்புதல் | 1 | – |
| 3 | TURIF தமிழ்நாடு சாலை அபிவிருத்தி உட்கட்டமைப்பு திட்டம் | 8 | – |
| 4 | திறந்த வெளியில் மலம் கழித்தலை போக்குதல் திட்டம் (சமுதாய கழிப்பிடம்) | – | – |
| 5 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | – | – |
| 6 | கல்வி நிதி | 10 | – |
| 7 | தூய்மை இந்தியா குழுமம் திட்டம் | 2 | 118.00 |
| 8 | சிறப்பு சாலைத் திட்டம் | 1 | – |

### (1) வீட்டுவரி :

சொத்துவரி அறிக்கையாண்டில் நடப்பு கேட்வு ரூ. **3,88,78,000**தொகையில் ஒவ்வொருவருக்கும் வரி **100%** ஆகும். வரிவிதிக்கப்பட்ட கட்டிடங்கள் **22134** ஆகும். ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஆண்டுக்கு சராசரி வரி ரூ.**1756/–** ஆகிறது. சென்ற ஆண்டில் ரூ. **2797/–** ஆகும்.

### (2) காலிநிலவரி :

மொத்த வரிவிதிப்பு **1081** நடப்பு ஆண்டில் மொத்த கேட்பு **12,68,000/–** வரிவிதிப்பின் சராசரி **1172/–** ஆகிறது. சென்ற ஆண்டில் ரூ.**1257/–**

### மொத்த வரிவிகிதம் :

**2018–2019 ஆண்டு நிலுவை :** (ரூ. இலட்சத்தில்)

| **நிலுவை :** | கேட்பு | நிலுவை | வசூல் சதவிகிதம் |
|---|---|---|---|
| சொத்துவரி | 145.88 | 90.68 | 37.84 |
| தொழில்வரி | 8.66 | 5.85 | 32.44 |
| குடிநீர்க்கட்டணம் | 31.33 | 20.24 | 35.39 |
| வரியில்லா இனம் | 300.52 | 217.32 | 24.69 |
| **நடப்பு :** | | | |
| சொத்துவரி (காலியிடவரி சேர்த்து) | 413.37 | 48.85 | 88.18 |
| தொழல்வரி | 35.56 | 4.39 | 87.65 |
| குடிநீர்க்கட்டணம் | 237.42 | 30.37 | 87.21 |
| வரியில்லா இனம் | 47.10 | 4.32 | 90.83 |

சொத்துவிரி நிலுவை மற்றும் நடப்பில் ரூ.**85.45** இலட்சம் வசூலிக்க வழக்கு மன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

அறிக்கை ஆண்டின் வருமானம் :

சொத்துவரி (வருடத்திற்கு) : **2018–2019**

| | | |
|---|---|---|
| பொதுக்காரியங்களுக்காக வருட வாடகை மதிப்பு | 51% | 221.28 |
| தண்ணீர் சாக்கடை வரி | 22% | 95.45 |
| கல்வி வரி | 20% | 86.78 |
| நூலக வரி | 7% | 30.37 |
| மொத்தம் | 100% | 433.88 |

### (3) தொழில்வரி :

இந்த தலைப்பில் நகராட்சிகள் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சவரி விதிக்கப்பட்டுள்ளது. அரைவருட ரூ. **21.000/-** கீழ் உள்ளவற்றிற்கு புதிய அரசு தொழில்வரிச்சட்டம் **59/1992** ன்படி தொழில்வரி விலக்கப்பட்டுள்ளது. **2018–2019** ஆம் ஆண்டில் தொழில்வரி **1.10.2018** முதல் நகரமன்றத் தீர்மான எண். **40** நாள் : 25.05.2018 25%உயர்த்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் தொழில்வரி வரவு ரூ.**33,98,000/–** ஆகும்.

## (4)விவசாய வரி :

அரசு உத்திரவின்படி விவசாய நிலவரி 1.4.80 முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது

## கல்வி நிலவரி :

இந்த வகையில் அதிகபட்சம் விதிக்கப்படும் வரி ஒவ்வொரு ஆண்டுக்கும் பொதுக்காரியங்களுக்கு முலதக மதிப்பில் 24% ஆகும்.

## கணினிப்பிரிவு மேட்டுப்பாளையம் நகராட்சி 2019–2020 :

இந்நகராட்சி கணினி பிரிவில் மொத்தம் 25 கணினிகளும், 5 டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டரும், 10 லேசர் பிரிண்டரும் உள்ளது.

கணினிப்பிரிவு ஒரு உதவித்திட்ட அமைப்பாளர் மற்றும் ஒரு புள்ளி விபர குறிப்பாளர் கீழ் இயங்கி வருகிறது.

நகராட்சியில் பதியப்படும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்த குழந்தைகளின் விபரங்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு சான்றிதழ்களும் கணினி மூலம் பிரிண்ட் செய்யப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. சான்றிதழ்கள் தமிழ்நாடு அரசின் இணையதளம் மூலமாக இணை இறக்கம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

01.04.2003 முதல் சொத்துவரி, குடிநீர்க்கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனங்கள் போன்ற அனைத்து விபரங்களும் கணினியில் பதியப்பட்டு அன்றாடம் வசூலாகும் வரி மற்றும் வரியில்லா இனங்களும் கணினி மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் அனைத்து வரவினங்களுக்கும் கணினி வழிஇரசீது வழங்கப்படுகிறது. வரி செலுத்துவோர் வசதிக்காக பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி நீருந்து நிலையத்தில் கணினி வரிவசூல் மையம் செயல்பட்டு வருகிறது.

01.04.2000 முதல் நகராட்சியின் வரவு செலவு கணக்குகள் (இரட்டை பதிவு முறையில்) அனைத்து செலவு சீட்டுகளும் (Vouchers) பதியப்பட்டுள்ளன.

கட்டிட விண்ணப்பங்களுக்கான அனுமதி மற்றும் கட்ட அனுமதி சான்று கணினி மூலம் வழங்கப்படுகிறது.

நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கான சம்பளப் பட்டியல் கணிணி மயாமக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கணிணிப் பிரிவில் மின்னஞ்சல் (E.Mail) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. commr,mettpalayam@tn.gov.in என்பது மின்னஞ்சல் (E.Mail) முகவரியாகும். நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், ஏனைய நகராட்சிகள் மற்றும் இதர அலுவலகங்களில் இருந்தும் மின்னஞ்சல் (E.Mail) மூலம் தபால்கள் உடனுக்குடன் பெறப்பட்டு அதற்குண்டான பதில்களை மின்னஞ்சல் (E.Mail) மூலம் அனுப்பப்பட்டும் வருகிறது. இந்நகராட்சியின் இணையதள முகவரி http://www.tnurbantree.tn.gov.in/mettupalayam

தற்போது அனைத்து இன வசூல் விபரங்கள் , பிறப்பு, இறப்பு விபரங்கள் போன்றவை அனைத்தும் Centralised web Based Software (UTIS) Urban Free Information System மூலம் அவ்வப்பொழுது நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலங்களில் பார்க்கப்பட்டு வருகிறது. இணையதள முகவரி website: http://www.tnurbaneseva.tn.gov.in கணிணிகள் அனைத்தும் (AMC) வருடாந்திர பராமரிப்பு மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் பொறியியல் பிரிவு பணிகள் முன்னேற்ற அறிக்கைகள் D.C.B Statements மக்கள் தொகை கணக்கெடுப்பு உள்ளாட்சித்துறை தேர்தல்கள் என பலவகையான பணிகள் அந்தந்த பணியாளர்கள் தாங்களே கணிணிகளை இயக்கி தங்கள் பணிகளை செய்ய உதவித்திட்ட அமைப்பாளர் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன.

கணினிப்பணிகள் அனைத்தும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மற்றும் திட்ட அமைப்பாளரால் மாதந்தோறும் முன்னேற்ற அறிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம் மூலம் ஆய்வு செய்யப்பட்டு அவ்வப்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோராலும் ஆய்வுக்கூட்டம் நடத்தி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**2019–2020ம் ஆண்டின் வரவு செலவு விபரம் : (உத்தேசம்)**

| Electricity Payments# :1 | | *EMI to TUIFDCO* :2* | | *EMI to TNUIFSL* :3* | | *EMI to Others* :4* | | *Pension Scheme: 5* | | *Bulk Water Charges to TWAD :6* | | Timely Debt and Statutory Payments | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Due | Paid | Due | Paid | Due | Paid | Due | Paid | Due | Paid | Due | Paid | Total Due | Total Paid | Balance |
| 23849080 | 23849080 | 12353865 | 12353865 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 36202945 | 36202945 | 0 |
| 24221470 | 24221470 | 5488750 | 5488750 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 29710220 | 29710220 | 0 |
| 23162656 | 23162656 | 6017959 | 5497584 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 29180615 | 28660240 | 520375 |
| 23011472 | 23011472 | 3932402 | 3932402 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 26943874 | 26943874 | 0 |
| **94244678** | **94244678** | **27792976** | **27272601** | **0** | **0** | **0** | **0** | **0** | **0** | **0** | **0** | **122037654** | **121517279** | **0** |

| Code No | Description of items | Shedule No. | Current Year Amount(?) | Previous Year Amount(?) |
|---|---|---|---|---|
| | | | | |
| | **Income** | | | |
| 110 | Tax Revenue | I-1 | 24646111 | 0 |
| 120 | Assigned Revenues & Compensations | I-2 | 5726339 | 0 |
| 130 | Rental Income from Municipal Properties | I-3 | 17858139 | 0 |
| 140 | Fees & User Charges | I-4 | 11015569 | 0 |
| 150 | Sale & Hire Charges | I-5 | 1298990 | 0 |
| 160 | Revenue Grants, Contribution and Subsidies | I-6 | 87905360 | 0 |
| 170 | Income from Investments | I-7 | 812220 | 0 |
| 171 | Interest Earned | I-8 | 1444551.33 | 0 |
| 180 | Other Income | I-9 | 6163567.7 | 0 |
| | | **Total** | **156870847** | 0 |
| | **Expenditure** | | | |
| 210 | Establishment Expenses | I-10 | 131931450 | 0 |
| 220 | Administrative Expenses | I-11 | 9368528 | 0 |
| 230 | Operations & Maintenance | I-12 | 61449408 | 0 |
| 240 | Interest & Finance Charges | I-13 | 141633.5 | 0 |
| 250 | Programme Expenses | I-14 | 59174 | 0 |
| 260 | Grants, Contribution and Subsidies | I-15 | 4567807 | 0 |
| 270 | Provisions and Write off | I-16 | 823139 | 0 |
| 272 | Depreciation | | 37149702 | 0 |
| 280 | Prior Period Item | I-18 | -2262063 | 0 |
| | | **Total** | **243228778.5** | 0 |
| **3109002-Gross Deficit of Expenditure over Income** | | | **86357931.47** | **0** |

| Code No | Description of items | Shedule No. | Current Year Amount(?) | Previous Year Amount(?) |
|---|---|---|---|---|
| | | | | |
| | **Income** | | | |
| 110 | Tax Revenue | I-1 | 9195443 | 0 |
| 140 | Fees & User Charges | I-4 | 27037369 | 0 |
| 170 | Income from Investments | I-7 | 2916429 | 0 |
| 171 | Interest Earned | I-8 | 257845 | 0 |
| 180 | Other Income | I-9 | 813125 | 0 |
| | | **Total** | **40220211** | 0 |
| | **Expenditure** | | | |
| 210 | Establishment Expenses | I-10 | 10718845 | 0 |
| 220 | Administrative Expenses | I-11 | 240464 | 0 |
| 230 | Operations & Maintenance | I-12 | 28055128 | 0 |
| 240 | Interest & Finance Charges | I-13 | 3412156.56 | 0 |
| 260 | Grants, Contribution and Subsidies | I-15 | 220750 | 0 |
| 270 | Provisions and Write off | I-16 | 3437902 | 0 |
| 272 | Depreciation | | 2838210 | 0 |
| 280 | Prior Period Item | I-18 | 1794098 | 0 |
| | | **Total** | **50717553.56** | 0 |
| | **3109002-Gross Deficit of Expenditure over Income** | | **10497342.56** | **0** |

| Code No | Description of items | Shedule No. | Current Year Amount(?) | Previous Year Amount(?) |
|---|---|---|---|---|
| | | | | |
| | **Income** | | | |
| 110 | Tax Revenue | I-1 | 8110243 | 0 |
| 170 | Income from Investments | I-7 | 2043071 | 0 |
| 171 | Interest Earned | I-8 | 232931 | 0 |
| 180 | Other Income | I-9 | 5969 | 0 |
| | | **Total** | **10392214** | 0 |
| | **Expenditure** | | | |
| 220 | Administrative Expenses | I-11 | 1310281 | 0 |
| 230 | Operations & Maintenance | I-12 | 2169681 | 0 |
| 240 | Interest & Finance Charges | I-13 | 30 | 0 |
| 270 | Provisions and Write off | I-16 | 56804 | 0 |
| 272 | Depreciation | | 1629781 | 0 |
| 280 | Prior Period Item | I-18 | 2073629 | 0 |
| | | **Total** | **7240206** | 0 |
| | **3109002-Gross Surplus of Income over Expenditure** | | **3152008.00** | **0** |

ஆணையாளர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி.